பணியாற்றுவதற்கு அவையிலே அமர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல்தான், இப்போது இந்தத் தீர்மானத்தின்மீது பேச வருகின்றவர்களும், மாண்புமிகு மறைந்த தலைவர் கலைஞர் அவர்களால் தெரிவித்தபடி, பேரவை விதி 92 (vii)–க்கு மாறாகப் பேசக் கூடாது என்பதை நீங்களும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான், நான் இந்த அளவில் எல்லோருடைய கவனத்திற்கும் எடுத்துச் சொல்கின்றேன். தயவுசெய்து, நடந்தது நடந்தவையாக இருக்கட்டும். நடந்ததை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேரவைக்கு மட்டுமல்ல, தமிழ்நாடே இன்றைக்கு ஒட்டுமொத்தமாக, அவருடைய துணிவை பாராட்டிக் கொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்னால், இதுதான் அரசியல் கட்சியினுடைய, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய உரிமை என்பதையும், அதை நிலைநாட்டித் தந்திருக்கிறார்கள் என்பதையும் மீண்டும் ஒரு முறை நான் பாராட்டிக் கொண்டு, வருகை தந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பேசும்போது, மாண்புமிகு ஆளுநர் அவர்களைப் பற்றியோ அல்லது வேறு யாரைப் பற்றியோ, பேரவை விதி 92 (vii)–க்குட்பட்டு பேச வேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) Digital Survey என்ற பெயரில் தமிழக எல்லைப் பகுதிகளை கேரள அரசு அளந்து கொண்டிருப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஏதோ ஒரு பொருள் குறித்து பேசுவதற்கு என்னிடம் வாய்ப்புக் கேட்டார்கள்; கேளுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சகோதர மாநிலமான கேரளாவில் இன்றைக்கு பொறுப்பேற்றிருக்கின்ற அரசு, digital survey என்ற பெயரில் நமது எல்லைப் பகுதிகளை அளந்து கொண்டிருப்பதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்து கொண்டேயிருக்கின்றன. அதுகுறித்து அரசுக்குத் தெரியுமா; ஆராயுமா? நம்முடைய

2023 ஜனவரி 11] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

எல்லைப் பகுதிகளான, நம்முடைய தமிழக பகுதிகளைக் காப்பதற்கு தமிழ்நாடு அரசு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். பதில் இருந்தால் சொல்லுங்கள்; இல்லையென்றால், தெளிவாகத் தெரிந்துகொண்டு சொல்லுங்கள்.*

***மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கூறியதைப்போல, நம்முடைய எல்லைப் பகுதிகளிலே வந்து அவர்கள் அளக்கவில்லை; அவர்களுடைய பகுதிகளில் அளந்து கொண்டிருக்கின்றனர். நம்முடைய எல்லைப் பகுதிகளில் வந்து அளக்க வரும்போது, நம்மிடம் அனுமதி வாங்கித்தான் அளக்க வேண்டுமென்று சொல்லி, கேரள அரசாங்கத்திற்கு நாங்கள் கடிதமும் எழுதியிருக்கிறோம்;* border*–ல் இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் நாங்கள் எச்சரிக்கை செய்திருக்கிறோம். பத்திரிகைகளின் வாயிலாக வந்த செய்திகளைப்போல, நம்முடைய* border*–ல், உதாரணத்திற்கு தேனி பகுதியைத்தான் நீங்கள் குறிப்பிட்டுச் சொல்கிறீர்கள் என்று நினைக்கிறேன். தேனி பகுதியிலே, நம்முடைய பகுதிகளிலே வந்து அவர்கள்* digital survey *செய்யவில்லை. அவர்கள், அவர்களுடைய பகுதிகளிலே செய்து கொண்டிருக்கின்றனர். நம்முடைய அரசாங்கம், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்திரிகைச் செய்தி வந்தவுடனேயே, எங்களை அழைத்து, அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் மிகுந்த எச்சரிக்கையோடு, விழிப்போடு, தேனி மாவட்டத்தை மட்டுமல்ல, நம்முடைய எந்த* border *பகுதியாக இருந்தாலும், கேரளா* border *ஆக இருந்தாலும் சரி, ஆந்திரா* border *ஆக இருந்தாலும் சரி, நம்முடைய பகுதியிலிருந்து ஒரு சென்ட் நிலத்தைக்கூட யாருக்கும் விட்டுத் தரமாட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி)*